திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, ஒரு சிறிய "Point of Information" இந்த "Call Attention"-ஐக் கொண்டு வரு கிறவர் தவிர வேறு யாரும் இதில் விளக்கம் கேட்பது கூடாதென்று சொன்னது மாதிரி நான் நினைக்கிறேன். இந்த விதியில் "There shall be no debate on such statement at the time it is made" என்று இருக் கிறது. அதை நான் ஒப்புக்கொள்கிறேன். "Debate" வேண்டியதில்லை. "but the Chairman may, in his discretion, permit not more than two questions by the member who has called the attention of the Minister, by way of elucidation or clarification".

சம்பந்தப்பட்ட அந்த உறுப்பினர் 2 கேள்விகள் மூலம் விளக்கம் கேட்பதை அனுமதிக்கலாமென்று இருக்கிறது. ஆனால் மற்ற உறுப்பினர்களைப் பற்றிச் சொல்லவில்லை. மற்ற உறுப்பினர்கள் யாரும் விளக்கம் கேட்கக் கூடாதென்று இதில் எந்த விதியிலும் சொல்லப்பட்டிருப்பதாகத் தெரிய வில்லை. அந்த சம்பந்தப்பட்ட மெம்பர் 2 கேள்விக்கு மேலாகக் கேட்க அனுமதிக்கக்கூடாது, சேர்மன் அனுமதிக்கமாட்டார் என்றிருக்கிறது.

VICE-CHAIRMAN (THIRU M. RAJAH IYER): By implication, it means that other Members cannot put questions.

THIRU K. RAJARAM: I am not questioning the ruling of the Vice-Chairman. I think it would not mean that the other Members should not put questions seeking clarification or elucidation. அப்படி ஒன்றுமில்லை.

VICE-CHAIRMAN (THIRU M. RAJAH IYER): I may bring to the notice of the hon. the Leader of the Opposition that the previous position was that not even a single question could be put and the whole thing ended with the statement of the Hon. Minister. In the Rules Committee it was discussed in detail and to serve the cause of justice and fairness, it was decided that the hon. Member who drew the attention of the Hon. Minister must have an opportunity to put at least a couple of questions by way of elucidation. The rule clearly says ". . . . permit not more than two questions by the member who has called the attention of the Minister". Those who have not called the attention of the Minister have no right to interfere with the call attention notice. If necessary, this could be discussed at the next meeting of the Rules Committee.

4. அரசினர் தீர்மானம்.

அலுவல் வரிசையில் மாறுதல் குறித்து

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, "சட்ட மன்ற விதி 21, உப விதி (3)-ன் கீழ் அரசின் சட்ட முன்வடிவுகள் என்ற தலைப்பில் முதலாவதும், ஆறாவதுமாகிய தமிழ்நாடு 1972-ஆம்

1972 டிசம்பர் 15]

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஆண்டு மாவட்டக் காவல் துறை (திருத்த) சட்ட முன்வடிவும், தமிழ் நாடு 1972-ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவும் முதலில் அவையின் தீர்மானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

மாற்றுத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி :—

"சட்ட மன்ற விதி 21, உப விதி (3)-ன் கீழ் அரசின் சட்ட முன் வடிவுகள் என்ற தலைப்பில் முதலாவதும் ஆறுவதுமாகிய தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு மாவட்டக் காவல் துறை (திருத்த) சட்ட முன் வடிவும், தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி(திருத்த)சட்ட முன் வடிவும் முதலில் அவையின் தீர்மானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு மாவட்டக் காவல்துறை (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 52/72).

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு மாவட்டக் காவல்துறை (திருத்த) சட்ட முன்வடிவு *(சட்ட பேரவைச் சட்ட முன்வடிவு எண் 52/1972) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

சென்னை மாநகரிலுள்ள பொது இடங்களில் மக்கள் கூடுவதையும் கூட்டங்களையும், ஊர்வலங்களையும் முறைப்படுத்துவதற்கும் சென்னை மா நகரக் காவல்துறைச் சட்டத்தின் 41-வது பிரிவு காவல்துறை கமிஷனருக்கு அல்லது அவரது ஆணைகளுக்கு உட்பட்டு தலைமைக் காவலர் பதவிக்கு மேற்பட்ட காவல்துறை அதிகாரி எவருக்கும் அதிகாரமளிக்கிறது. தமிழ் நாடு 1859-ஆம் ஆண்டு மாவட்டக் காவல்துறைச் சட்டத்தில் அத்தகைய விதித்துறை எதுமில்லை.

தமிழ்நாடு 1859-ஆம் ஆண்டு மாவட்டக் காவல்துறைச் சட்டத்தின் 54-எ பிரிவு, அச்சட்டத்தில் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ளன வாகிய 1888-ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல்துறைச் சட்டத்தின் விதித்துறைகளை எந்த நகரத்துக்காகிலும் நீட்டிக்க வகை செய்கிறது. அவ் விதித்துறைகளை மாவட்டங்களில் உள்ள நகரங்கள் நீங்கலாக உள்ளூர் பகுதிகளுக்கு நீட்டிக்க மேற்சொன்ன பிரிவு வகை செய்யவில்லை.

சென்னை மாநகரக் காவல்துறைச் சட்டத்தின் 41-வது பிரிவும், மாவட்டக் காவல்துறைச் சட்டத்தின் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பிரிவுகளில் ஒன்றாகத் தற்போது இல்லை.

* 235ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.